1931 ஏப்ரல் 16]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், கொடைக்கானலுக்கு பஸ் விட வேண்டுமென்றால் இங்கிருந்து அதிகப்பேர் ஏற மாட்டார்கள் என்று. திண்டுக்கல் முதலிய இடங்களிலிருந்து செல்ல வேண்டுமென்றாலும் முதல் பஸ், இரண்டாவது பஸ், மூன்றாவது பஸ் என்று நின்றாலும் இடமிருப்பது இல்லை. எம். எல். ஏ.க்கள் காத்திருக்கின்ற நிலைமை இருக்கிறது. தனியார் பஸ், பி. ஆர். சி. பெரிய பஸ்கள் மலையிலே சென்று வருகின்றன. கொடைக்கானலுக்கு விடுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னாலும்கூட, கொடை ரோடு வழியாக வத்தலக்குண்டு வரையிலுமாவது சொகுசு பஸ் விடுவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லும்பொழுது, இங்கேயிருந்து யாரும் ஏறமாட்டார்கள் என்று சொல்லவில்லை. சொகுசுப் பேருந்து என்பது சிறிய பேருந்தாக இருக்கும்; அப்பொழு தான் மலையின் மேலே இயக்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படிப் பட்ட சிறிய பேருந்துகளிலே 20 சீட்டுகள் வரையில்தான் இருக்கும். அதை வைத்துக்கொண்டு இங்கேயிருந்து போவது என்பது முறையாக இருக்காது என்பதால் பக்கத்தில் இருக்கின்ற, அடிவாரத்திலே இருக்கின்ற ஒரு நகரத்திற்கு இயக்கி, அங்கே யிருந்து வேறு பேருந்தை இயக்கலாம் என்று நான் ஏற்கனவே சொன்னேன்.

குளத்தூர் தொகுதியில் குழந்தைகள் காப்பகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 769. திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) குளத்தூர் தொகுதியிலிருந்து குழந்தைகள் காப்பகம் அமைப்பது சம்பந்தமாக மாவட்ட சமூக நல அலுவலரிடமிருந்து திட்டம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த கிராமங்களில் காப்பகங்கள் அமைக்கப்படும்?

(இ) பேராம்பூர் கிராமம் சேர்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை.

மற்றும் (இ)

(ஆ) கேள்வித் இடமில்லை.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவர்வர்களே, குழந்தைகள் காப்பகத்திற்கு எவ்வளவு தொகை அனுமதிக்கப்படுகிறது? வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ள மக்களுடைய குழந்தைகளுக்குப் போதுமான சத்துணவு கொடுக்க வேண்டியதற்காக ஒதுக்கப்படும் தொகை அதிகரிக்கப்படுமா? என்னுடைய தொகுதியில் விவசாயத்தைத் தவிர வேறு தொழில் கிடையாது. இப்பொழுது மாதம் மும்மாரி பொழிவதில்லை. ஆகவே, விவசாயம் செய்யக்கூட முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, குளத்தூர் தொகுதியில் உள்ள பெரும்பகுதி மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாடுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் சரியான வகையில் சத்துணவு இன்றி, கூம்பிப்போய், மெலிந்து போய் உள்ளதால் அங்கே குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு, மாவட்ட சமூக நல அலுவலருக்கு ஆலோசனை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உதவித்தொகை அளிப்பதைக் கூட்ட வேண்டுமென்று கூறினார்கள். சத்துணவு போதாத நிலையில் இருக்கிறது, ஆகவே உதவித்தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினார்கள். அது பரிசீலிக்கப்படும்.

கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஒருங்கிணைந்த ஆவின இனப் பெருக்கத் திட்டம்.

* வினா எண் 770—திரு எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கால்நடை பராமரிப்புத் துறையில் ஒருங்கிணைந்த ஆவின இனப்பெருக்கத் திட்டம் எந்த ஆண்டு முதல் செயல்படுகிறது?

(ஆ) எங்கே செயல்படுகிறது?

(இ) இத் திட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கால் நடைகள், காளைகள், பசுக்கள் எத்தனை? (ஆண்டு வாரியாக)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இத்திட்டம் கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயல்படவில்லை.

(ஆ) மற்றும்(இ) எழவில்லை.